செ. கு. எண்: 182 நாள்: 18-05-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 18.5.2012

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், திருநின்றவூர் நடுக்குத்தகை கிராமம் அருகே, திருநின்றவூர் - பெரியபாளையம் நெடுஞ்சாலையில் 15.5.2012 அன்று ஆவடியிலிருந்து பெரியபாளையம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து எதிரில் வந்து கொண்டிருந்த வேனின் மீது மோதியதில், சென்னை மாதவரத்தைச் சேர்ந்த திரு. ராமசாமி என்பவரின் மகன் வேன் ஓட்டுநர் திரு. ராஜாமதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அம்பத்தூர் வட்டம், போரூர் அருகே 15.5.2012 அன்று சென்னை, முகலிவாக்கத்தைச் சேர்ந்த திரு. ராதாகிருஷ்ணன் என்பவரின் மகன் ராஜேஷ் சாலையைக் கடக்கும் போது, அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 16.5.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அம்பத்தூர் வட்டம், போரூர் அடுத்த செட்டியார் அகரம் கிராமத்தில் 15.5.2012 அன்று இரு சக்கர வாகனத்தின் மீது சென்னை பிராட்வேயிலிருந்து அய்யப்பன்தாங்கல் சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த குன்றத்தூர், சோமங்கலத்தைச் சேர்ந்த திரு. ரங்கசாமி என்பவரின் மகன் திரு ராஜேந்திரன் மற்றும் சென்னை ஆவடியைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவரின் மகன் திரு குமார் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர் வட்டம், சிறுகனூர் கிராமத்தில் 16.5.2012 அன்று சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து, அதே திசையில் சென்று கொண்டிருந்த கிரேன் மீது மோதியதில், அரசுப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், திருவரங்கப்பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பிச்சைபெருமாள் என்பவரின் மூன்று வயது குழந்தை அஜிஸ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த ராஜாமதி, ராஜேஷ், ராஜேந்திரன், குமார் மற்றும் குழந்தை அஜீஸ் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவங்களில் காலமான ராஜாமதி, ராஜேஷ், ராஜேந்திரன், குமார் மற்றும் குழந்தை அஜிஸ் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு: –

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.